## முதன்மை அங்கன்வாடி பணியாளர் / குறுமைய அங்கன்வாடி பணியாளர் / அங்கன்வாடி உதவியாளர் பணிநியமன விதிமுறைகள்

### I.முதன்மை மைய அங்கன்வாடி பணியாளர்

| வ. எண். | பொருள் | தகுதிகள் |
|---|---|---|
| 1. | வயது | 01.07.17 அன்று 25 வயது முதல் 35 வயது வரை உள்ளவராக இருத்தல் வேண்டும். மாற்றுதிறனாளிகளுக்கு 38 வயது வரை தளர்வு அளிக்கப்படும். விதவை, கணவரால் கைவிடப்பட்டவர் மற்றும் மலைப்பகுதியில் வசிப்பவர்களுக்கு 40 வயது வரை தளர்வு வழங்கப்படும். மலைப்பகுதியில் வசிப்பவர்களுக்கு குறைந்தபட்ச வயது 20 வயது ஆகும். |
| 2. | கல்வித் தகுதி | SSLC தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மலைப்பகுதிகளில் வசிப்பவர்களுக்கு குறைந்தபட்ச கல்வி தகுதி எட்டாம் வகுப்பு தேர்ச்சி ஆகும். |
| 3. | இருப்பிடம் | **ஊரக பகுதிகளில்** அங்கன்வாடி மையம் காலியாக உள்ள அதே கிராமத்தில் வசிக்கும் தகுதியான நபர்களாக இருக்க வேண்டும். உள்ளூரில் தகுதியான நபர்கள் இல்லாத பட்சத்தில், மையம் அமைந்துள்ள அதே கிராம பஞ்சாயத்தை சேர்ந்த அருகாமையிலுள்ள பிற கிராமங்களிலிருந்து தகுதியான நபர்கள் பரிசீலிக்கப்படுவர். அவ்வாறு அதே பஞ்சாயத்தை சார்ந்த பிற கிராமங்களில் தகுதியான விண்ணப்பதாரர் இல்லாத பட்சத்தில் மையத்திலிருந்து 10 கி.மீ.தூரம் வரை உள்ள பிற பஞ்சாயத்தை சார்ந்த விண்ணப்பதாரர்கள் பரிசீலிக்கப்படுவர். அனைத்து பிரிவுகளிலும் விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.<br>**நகர் பகுதிகளில்** அங்கன்வாடி மையம் காலியாக உள்ள அதே வார்டில் வசிக்கும் தகுதியான நபர்களாக இருக்க வேண்டும். தகுதியான நபர் அதே வார்டில் இல்லாவிடில் அருகிலுள்ள பிற வார்டுகளை சேர்ந்தவர் பரிசீலிக்கப்படுவர். தகுதியான நபர் அருகிலுள்ள வார்டிலும் இல்லாதபட்சத்தில் அதே கோட்டத்தை / நகராட்சி / பேரூராட்சியை சார்ந்த பிற வார்டுகளில் உள்ளவர்கள் பரிசீலிக்கப்படுவர். அனைத்து பிரிவுகளிலும் விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். |

### II.குறு மைய அங்கன்வாடி பணியாளர்

| வ. எண். | பொருள் | தகுதிகள் |
|---|---|---|
| 1. | வயது | 01.07.17 அன்று 25 வயது முதல் 35 வயது வரை உள்ளவராக இருத்தல் வேண்டும். மாற்றுதிறனாளிகளுக்கு 38 வயது வரை தளர்வு அளிக்கப்படும். விதவை, கணவரால் கைவிடப்பட்டவர் மற்றும் மலைப்பகுதியில் வசிப்பவர்களுக்கு 40 வயது வரை தளர்வு வழங்கப்படும். மலைப்பகுதியில் வசிப்பவர்களுக்கு குறைந்தபட்ச வயது 20 வயது ஆகும். |
| 2. | கல்வித் தகுதி | SSLC தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மலைப்பகுதிகளில் வசிப்பவர்களுக்கு குறைந்தபட்ச கல்வி தகுதி எட்டாம் வகுப்பு தேர்ச்சி ஆகும். |

| | | |
|---|---|---|
| 3. | இருப்பிடம் | **ஊரக பகுதிகளில்** அங்கன்வாடி மையம் காலியாக உள்ள அதே கிராமத்தில் வசிக்கும் தகுதியான நபர்களாக இருக்க வேண்டும். உள்ளூரில் தகுதியான நபர்கள் இல்லாத பட்சத்தில், மையம் அமைந்துள்ள அதே கிராம பஞ்சாயத்தை சேர்ந்த அருகாமையிலுள்ள பிற கிராமங்களிலிருந்து தகுதியான நபர்கள் பரிசீலிக்கப்படுவர். அவ்வாறு அதே பஞ்சாயத்தை சார்ந்த பிற கிராமங்களில் தகுதியான விண்ணப்பதாரர் இல்லாத பட்சத்தில் மையத்திலிருந்து 10 கி.மீ.தூரம் வரை உள்ள பிற பஞ்சாயத்தை சார்ந்த விண்ணப்பதாரர்கள் பரிசீலிக்கப்படுவர். அனைத்து பிரிவுகளிலும் விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். |

**III. அங்கன்வாடி உதவியாளர்**

| வ. எண். | பொருள் | தகுதிகள் |
|---|---|---|
| 1. | வயது | 01.07.17 அன்று 20 வயது முதல் 40 வயது வரை உள்ளவராக இருத்தல் வேண்டும். மாற்றுதிறனாளிகளுக்கு 43 வயது வரை தளர்வு அளிக்கப்படும். விதவை, கணவரால் கைவிடப்பட்டவர் மற்றும் மலைப்பகுதியில் வசிப்பவர்களுக்கு 45 வயது வரை தளர்வு வழங்கப்படும். |
| 2. | கல்வித் தகுதி | தமிழில் எழுத, படிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| 3. | இருப்பிடம் | **ஊரக பகுதிகளில்** அங்கன்வாடி மையம் காலியாக உள்ள அதே கிராமத்தில் வசிக்கும் தகுதியான நபர்களாக இருக்க வேண்டும். உள்ளூரில் தகுதியான நபர்கள் இல்லாத பட்சத்தில், மையம் அமைந்துள்ள அதே கிராம பஞ்சாயத்தை சேர்ந்த அருகாமையிலுள்ள பிற கிராமங்களிலிருந்து தகுதியான நபர்கள் பரிசீலிக்கப்படுவர். அவ்வாறு அதே பஞ்சாயத்தை சார்ந்த பிற கிராமங்களில் தகுதியான விண்ணப்பதாரர் இல்லாத பட்சத்தில் மையத்திலிருந்து 10 கி.மீ.தூரம் வரை உள்ள பிற பஞ்சாயத்தை சார்ந்த விண்ணப்பதாரர்கள் பரிசீலிக்கப்படுவர். அனைத்து பிரிவுகளிலும் விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.<br>**நகர் பகுதிகளில்** அங்கன்வாடி மையம் காலியாக உள்ள அதே வார்டில் வசிக்கும் தகுதியான நபர்களாக இருக்க வேண்டும். தகுதியான நபர் அதே வார்டில் இல்லாவிடில் அருகிலுள்ள பிற வார்டுகளை சேர்ந்தவர் பரிசீலிக்கப்படுவர். தகுதியான நபர் அருகிலுள்ள வார்டிலும் இல்லாதபட்சத்தில் அதே கோட்டத்தை / நகராட்சி / பேரூராட்சியை சார்ந்த பிற வார்டுகளில் உள்ளவர்கள் பரிசீலிக்கப்படுவர். அனைத்து பிரிவுகளிலும் விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். |

**பொது**

1. தகுதியான பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். ஆண்கள் விண்ணப்பிக்க இயலாது.
2. ஊரக பகுதிகளில் உள்ள மையங்களுக்கு நகர் பகுதிகளில் வசிப்பவர்கள் விண்ணப்பிக்க இயலாது. அதேபோல் நகர் பகுதியில் உள்ள மையங்களுக்கு ஊரக பகுதியில் வசிப்பவர்கள் விண்ணப்பிக் இயலாது.
3. தற்போது வெளியிடப்படும் காலி பணியிடங்களுக்கு மட்டும் விண்ணப்பிக்க இயலும். பிற மையங்களுக்கு விண்ணப்பிக்க இயலாது.
4. மையங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வகுப்பை சார்ந்தவர் மட்டுமே விண்ணப்பிக்க இயலும். பிற வகுப்பை சார்ந்தவர் விண்ணப்பிக்க இயலாது.
5. SC(அருந்ததியர்) வகுப்பு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்களில் SC(அருந்ததியர்) வகுப்பை சார்ந்த தகுதியான விண்ணப்பங்கள் இல்லையெனில் SC வகுப்பை சார்ந்தவர்கள் பரிசீலிக்கப்படுவர். எனவே SC(அருந்ததியர்) வகுப்பிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்களில் SC வகுப்பைச் சார்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். ஆனால் உரிமை கோர இயலாது.
6. விண்ணப்பங்கள் முழுமையாக பூர்த்திசெய்து உரிய சான்றுகள் / ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் வழங்கிய பின்னர் சான்றுகள் சமர்ப்பித்தால் ஏற்கப்படமாட்டாது.
7. தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் நேர்முக தேர்வு குறித்த கடிதம் அனுப்பப்படும்.
8. விண்ணப்பங்கள் உரிய படிவத்தில் இல்லை என்றாலும், முழுமையான விபரங்கள் இல்லை என்றாலும், உரிய சான்றுகள் இல்லை என்றாலும் விண்ணப்பம் முற்றிலும் நிராகரிக்கப்படும்.
9. விண்ணப்பதாரரின் கல்வி தகுதி, வயது, இருப்பிடச்சான்று குறித்து சான்றுகள்/ஆவணங்கள் இல்லையெனில் நிராகரிக்கப்படும்.
10. விண்ணப்பங்கள் மையம் சார்ந்த சம்பந்தப்பட்ட குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகங்களில் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். பிற அலுவலகங்களில் பெறப்படமாட்டாது. மேலும் கடிதம் மூலம் அனுப்புவதை தவிர்க்க வேண்டும்.